www.tamilarangam.net

# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் – 7: 4 மார்கழி 2005

உள்ளே..


– நூலகக் கண்காட்சி
– மனிதமாய் வாழ
– பெண் எழுத்தாளர் சந்திப்பு
– பெண்கள் எதிர்கொள்ளும்.....
– ஆசியப் பெண்கள் கூட்டம்
– அந்தரத்தில் ....
– பழையன கழிதலுமாய்...
– பெண்கள் குழுக்களின் ஒன்று கூடல்


சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புகளுடனும் தன் தடத்தை இப்பெண்கள் செய்திமடல் மூலம் உங்கள் முன் பதிக்கின்றது. இதன் கால்கள் மண்ணில் ஆழப்பதிந்து மேலும் முன்னேற உங்கள் கருத்துக்களை எதிர் பார்க்கின்றோம்.

–ஆசிரியை–

## நூலகக் கண்காட்சி



இன்றைய உலகில், பல்லாயிரக்கணக்கான தகவல் மூலங்கள் வெளிவந்து கொண்டிருந்தாலும், பல தகவல் மூலங்களை தொகுத்து, ஒரே இடத்தில் ஆவணப் படுத்தி, புதிய தொழிநுட்ப முறைகளுடன், ஒரு வாசகருக்கு சரியான வடிவில், உரிய நேரத்தில் வழங்குகின்ற ஒரு தகவல் நிலையமாகவும், மக்களின் பல்கலைக்கழகமாகவும் விளங்குவது நூலகங்களாகும்.

நூலகம் என்பதை எடுத்து நோக்கின் அவை, பொது நூலகம், கல்வியியல் சார்ந்த நூலகம், தேசிய நூலகம், சிறப்பு நூலகம் என பல வகைகளில் பிரிக்கப்பட்டு வாசகருக்கு உரிய தகவல்களை வழங்கி வருவதைக் காணலாம்.

இந்த வகையில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் நூலகமும் பெண்கள் தொடர்பான, சிறுவர்கள் தொடர்பான ஆவணங்களை தன்னகத்தே உள்வாங்கி ஒரு சிறப்பு நூலகமாகச் செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய எமது நூலகத்தின் வாசகரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டும், பெண்கள் தொடர்பான ஆவணங்களை மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்தும் பொருட்டும் வருடாவருடம் நூலகக் கண் காட்சிகளை நடாத்தி வருகிறது.
இதனையொட்டி கடந்த 10ம் மாதம் 25ம் திகதி கரடியனாறு மகா வித்தியாலயத்தில் ஒரு நூலகக் கண்காட்சி ஒன்று ஒழுங்கு செய்து வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. கல்வியறிவு பெற்றவர்கள் மிகவும் குறைந்த மக்களைக் கொண்ட இப்பிரதேசத்தில் இக்கண்காட்சியை நடத்துவது ஒரு சவாலாக அமைந்த போதும், அங்குள்ள பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டதோடு, அக்கிராமத்தைச் சேர்ந்த பல மக்களும் பார்வையிட்டனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அத்தோடு இக்கண்காட்சியில் சிறப்பு அதீதியாக கோட்டைக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். மேலும் அப்பாடசாலை அதிபர் அவர்களும், பாடசாலை நூலகரும் உரையாற்றினர்.

இக்கண்காட்சியில் பெண்களது உரிமைகள் தொடர்பான ஆவணங்கள் அவர்களது நாவல்கள், கவிதைத் தொகுப்புக்கள், சிறுகதைகள், மற்றும் பெண்கள் தொடர்பான சஞ்சிகைகள், சிறுவர்கள் தொடர்பான ஆவணங்கள், மற்றும் இலக்கிய நூல்கள், கல்வியியல் நூல்கள், சுவரொட்டிகள் போன்றவைகள் காட்சிக்கு வைக்கப்பட்டது.

பால்நிலை சமத்துவம் சார்ந்து விழிப்புணர்வை பொது மக்களுக்கு அதிகரிக்கும் நோக்குடன் தொடர்ந்து பி.ப. நிகழ்வாக "கிரிஜா" எனும் குறுந்திரைப்படம் ஒன்றை நிகழ்த்தி கலந்துரையாடல் செய்யப்பட்டது.

அ.க. சஜீதா

# மனிதமாய் வாழ



வாழ்வில் உறுதியாய் எழுந்த காலங்களை முன் வந்து சொல்வதா, இன்னும் மறந்து போகாமல் இருக்கும் துன்ப நினைவுகளை மீட்டிப்பார்ப்பதா... என்றபடி 07-12-2005 அன்று பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான செயற்பாட்டு வார நாட்களின் மற்றுமோர் காலைப் பொழுதில்சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையச் சகோதரிகளுடன் சக்தி குழுவினர் கூடியிருந்தனர்.

பூ, பிஞ்சு, காய், கனி அத்தனையும் கேள்விகளற்று, கேட்பாரற்று வன்முறைச் சுமைகளின் அழுத்தத்தில் நொடிந்து போய்க்கொண்டிக்கும் தருணம் இது. இத் தருணத்தில் இருந்து விடுபட்டு இனிமேலாவது அனைவர் வாழ்வும் பிரகாசிக்க வேண்டும் எனும் பிரார்த்தனையுடன் சுடர் ஏற்றி தம் அனுபவங்கள் கூடியிருந்தோர் பகிர்ந்து கொண்டனர்.

"எதிராளியால் கடத்தப்பட்டு தொலைந்துபோன என்ர பிள்ளதான் எனக்கு வேனும். நீதி மன்றத்தில் என் பிரச்சனைய கதைக்க என்னை விடுறாங்க இல்ல. தவண தவணயா போட்டு திரும்ப திரும்ப வரமட்டும் சொல்லுறாங்க" இது ஒரு பெண்ணின் கசப்பான அனுபவ வெளிப்பாடு.

* *

"என்னையும் பிள்ளைகளையும் இவர் விட்டிற்று போயித்தார். சாப்பாடு, உடுபுடவை தர ஆரும் பக்கத்தில இல்ல. மன்முனை ஆத்த கடந்துதான் என்ர சொந்தக் காரர்கள் வீட்டபோய் இருந்தன். கொஞ்சநாளால அவர்களும் முகத்தை சுளிக்க தொடங்கித் தாங்க. திரும்ப ஆத்தைக் கடந்துவீட்டுக்கு பிள்ளைகளோட வரும்போது பாதையில் இருந்து குதிச்சு ஆத்தில விழுந்து சாகனும் என்று நினைச்சன். ஆனா பிள்ளைகளின் முகத்தை பார்க்க அது என்னால முடியல்ல. ஒரு மில்லுல வேலை செய்ய தொடங்கினன். தண்ணியும் குடிச்சு நேரத்த போக்காட்ட கூடாது என்று ஓடி ஓடி உழைச்சன். ஒருநாள் சம்பளம் எடுக்க திரும்ப என்ற மனுசன் வந்தார் என்னோட சேரப்போறன் என்று. இருக்கிற சம்பளத்த பிச்சுத்து போற அவர் புத்தி எனக்கு தெரியும். தனிய பிள்ளைகளோட இருந்தன். இன்றைக்கு இரண்டு அறையோட கல் வீடு கட்டி இருக்கன். இப்ப நாங்க சாப்பிடும் சாப்பாட்டு தட்ட இடயில பறிச்சி மணல் நிரப்பி அதால் அடிக்க அப்பா வருவாரோ என்ற பயமில்லாம மூன்று நேரம் பிள்ளைகள் நிம்மதியா சாப்பிடுதுகள். ஆனா ஒரு கவலை கலியானம் கட்டின நாளில் இருந்தே எனக்கு விழுந்த குத்து, அடியில பயந்து பயந்து என்ர ஒரு மகன் மூளைய பாழாக்கித்தான். இன்றைக்கு என்ர உழைப்புத்தான் அவன்ர உயிர பிடிச்சிவைச்சிருக்கு."

* *

"அப்பா, அம்மாவை விட்டிற்று வேறு ஒரு பெண்ணை கலியானம் கட்டிற்று போயித்தார். அவர் கலியானம் கட்டினது என்ர வயசுப் பிள்ளையை. அதால அவர இனி எப்படி அப்பா என்று கூப்பிடுற. நாங்கள் எல்லாம் அம்மாட முயற்சியால படிச்சி நல்லா இருக்கம். ஆனா அப்பா இன்றைக்கு அநாதை மாதிரி தெருத்தெருவா திரியிறார்........."

வன்முறை ஒன்றாக அதன் வடிவங்கள் தான் வெவ்வேறாய் நிகழ்ந்து கொண்டே உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண் எழுத்தாளர் சந்திப்பு



வன்முறைகளற்ற முன்னேற்றகரமான சிந்தனை ஆற்றலினால் பெண்கள், சமூக வழிகாட்டியாகவும், சமூகக் குழுக்களுக்கு தலைமை வகிப்பவர்களாகவும் விளங்கினார்கள். எனினும் காலப்போக்கில் சமுதாயத்தில் சொத்துக்கள் குவித்தலும் சுரண்டலும், பற்றாக் குறையும் போட்டியும் இடம்பெறத் தொடங்க வன்முறைமிக்க வர்க்க முரண்பாடுமிக்க சமுதாயம் உருவாகின்றது. இங்கு சொத்தற்றவர்களாகவும், ஒடுக்கப்பட்டவர்களாகவும் சுரண்டப்படுபவர்களாகவும் பெண்கள் மாற்றப்படுகிறார்கள். பெண்கள் இவ்வாறு ஒடுக்கப்பட்டு வாழும் நிலையில் இருந்து மீண்டெழ முடியாதவாறு சமூக கருத்துருவாக்கங்களும் உருவாக்கப் படுகிறது.

அந்நிய தேசத்து நன்பனே!
எனது நாடு எப்படி என்று கேட்கிறாயா?
வார்த்தையில் வரிகளில்
புரிந்து கொள்வாயா?

நன்பா!
உனது கால்களே - நீ நடப்பதை
தடைசெய்தால்
உண்மைகளை,
உன் ஆசைகளை வெளியிட
உன் வாயே மௌனித்தால்..
நல்லதை புரியும் உன் கரங்கள்
செயலாற்ற மறுத்துவிட்டால்
உன் இதயம் கூட
விட்டு விட்டுத் துடிக்க ஆரம்பித்தால்.

எப்படி இருக்கும் உனக்கு?
அப்படியே எங்களுக்கும்
எங்கள் தேசம் இருக்கின்றது!

– சுதாகினி–



எனினும் பெண்களின் இயல்பான சிந்தனை ஆற்றலை எவராலும் வேரறுக்க முடியவில்லை. அவர்கள் பேனைகளின் கழுத்துகளுக்கு முடிச்சுப் போட முனைந்தாலும் எத்தனையோ பெண்கள் இன்று கட்டவிழ்த்து விட்டார்கள். பெண் எழுத்தாளர்கள் அவர்களின் தனித்துவமான எழுத்தாற்றலினால், விரல்விட்டு எண்ணமுடியா எழுத்தாளர்களுக்குள், பிரகாசிக்க தொடங்கி விட்டார்கள்.

அனைத்துமே வியாபாரமாகிவிட்ட இன்றைய காலகட்டத்தில் எமது சமுதாயம் பலவித வன்முறைகளால் அவலத்திற்குள்ளாகி வருவது கண்கூடு. வீட்டின், நாட்டின் சமாதானம் கேள்விக்குள்ளாகி வருகிறது. இதனால் பெண்களும் வருங்கால சிறுவர்களும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் வன்முறைகளற்ற முன்னேற்றகரமான சிந்தனைகளும், தீர்மானங்களுமே கட்டாயத் தேவை. சமத்துவமான வன்முறைகளற்ற சமாதான சமூகத்திற்காய் குரல் கொடுத்துவரும் பெண்களின் கருத்துக்களும், ஆலோசனைகளும், தீர்மானங்களும் மீண்டெழ வேண்டும். அனைத்து விதமான அடக்குமுறைகளையும் அனைத்து பெண்களும் "பெண்" எனும் காரணத்தாலும் மேலும் அனுபவிக்க நேரிடினும், பெண் எழுத்தாளர்கள் இந்த ஒடுக்குதலுக்கான காரணத்தைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள். பெண்களும் சமூகமும் பாதிப்பில் இருந்து மீழும் வழிகளை முன் வைக்கிறார்கள்.

இவர்கள் முன் வைக்கும் கருத்துக்கள் வலுப்பெற பெண் எழுத்தாளர்கள் ஒன்றிணைய வேண்டும். பெண் எழுத்தாளர்களின் கருத்துக்கள், பெண் எழுத்தாளர்கள் அதிகரிக்க வேண்டும். எழுத்துத் துறையில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை பகிர்ந்துகொள்ள வேண்டும். கருத்துக்கள் மேலும் வலுப்பெற, ஆழமாக ஊடுருவ எழுத்துக்கள் செம்மைப் படுத்தப்படவேண்டும். தரம் அதிகரிக்கவேண்டும். பெண் எழுத்தாளர் வட்டங்கள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். ஆகவே பெண் எழுத்தாளர் சந்திப்புக்கள் இடம்பெற வேண்டும். இந்தவகையில் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்து கொடுத்துவரும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் இவ் வருடத்திற்கான பெண் எழுத்தாளர் சந்திப்பை 28-12-2005 அன்று நடத்தியது. இந்நிகழ்வில் வளர்ந்து வரும் கவிஞை சுதாகினியின் "அடையாளம்" கவிதைநூல் அறிமுகம் இடம்பெற்றது.

www.tamilarangam.net

# பெண்கள் எதிர்கொள்ளும் இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரப்பிரச்சனைகள்

28, 29-9-2005 அன்று பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பினரால் பெண்களின் இனப்பெருக்க சுகாதாரம் சார்ந்து குடும்ப, சுகாதார, வைத்திய - சட்ட சமூக ரீதியில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் பின்னடைவுகளும் அதனைத் தீர்த்து வைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களும் சம்பந்தமான பயிற்சி வகுப்பு இடம்பெற்றது.

பெண்கள் இனப்பெருக்க சுகாதாரம் சார்ந்து இன்றுவரை பலவிதமான பிரச்சனைகளை எதிர் கொள்கிறார்கள். இது ஒரு பாரிய பிரச்சனையாக பொறுப்பு வாய்ந்த மட்டங்கள் கவனத்தில் கொள்வதில்லை. இப் பிரச்சனைகள் பற்றி பலவித சமூகத்தாக்கத்திற்குள்ளாகி இருக்கும் பெண்களும் வெளிப்படுத்துவதில்லை. எனினும் பெண்களைத் தாக்கும் பாரிய நோய்கள், பெண்களின் தற்கொலை, கொலை அதிகரிப்புக்கள், பெண்களின் மன உளைச்சல்கள், குழந்தைகளை தாக்கும் நோய்களும் இறப்புகளும், பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் ஏற்படும் மரண அதிகரிப்புக்கள், அதிகரித்துச் செல்லும் குடும்ப வன்முறைகள் போன்றன இனப் பெருக்க சுகாதாரம் சார்ந்து பெண்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சனைகளை எடுத்துக்காட்டுகின்றன.

* குடும்ப வன்முறைக்குட்படும் பெண், சட்ட உதவியை பெற்றுக்கொள்ள முடியாதபடி சமூகத்தின் "குடும்பம்" என்ற வரைவிலக்கணத்தை வேதமாக கொண்ட காவலர்களால் புத்தி புகட்டப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்படும் நிலமையில் அவள் மீண்டும் மீண்டும் எதிர்கொள்ளும் குடும்ப வன்முறை,
* தன் பிரச்சினையை, தன் உணர்வை, தன் மொழியில் கூற முடியாமல் காவல் நிலையங்களில், சட்டத்தின் முன் தவிக்கும் பெண்களின் நிலமை.....,
* பெண்கள் நிரந்தர குடும்பக்கட்டுப்பாட்டு சத்திர சிகிச்சை செய்துகொள்ளவேண்டுமாயின் அவள் கணவனின் கையொப்பம் வைத்தியசாலையால் கேட்கப்படுகிறது. ஆனால் பெண்களின் கருப்பையை புலனாய்வுத் துறையாய் பாவிக்க நினைக்கும் சில ஆண்கள் படிவத்தில் கையொப்பமிட மறுக்கின்றனர். இதனால் பெண்கள், சத்திர சிகிச்சையை வைத்திய துறையில் பெற்றுக்கொள்ள முடியாமல் அதிக குழந்தைகளைப் பெறுதலும் தாய் சேய், போசாக்கு குறைபாட்டு நோய்களும், இறப்புக்களும் ஏற்படுகின்றது.
* குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் அத்தனையும் பெண்களுக்குத்தான் உண்டு எனும் ஆண்களின் சிந்தனையும் ஆண்களுக்கான குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் பற்றிய விளக்கத்தை பரவலாக்க வேண்டிய வைத்தியதுறையின் கட்டாயக் கடமையின் குறைபாடுகளும் பெண்களுக்கெதிரான பாதிப்பை ஏற்படுத்துகிறது.
* பெண்ணின் திருமண வயதை 18 வயதாக நிர்ணயித்துள்ளபோதும் பாலியல் வன்முறைமூலம் ஏற்படும் கருத்தரிப்பு, மிகச்சிறு வயதில் பாலியல் பலாத்காரம் மூலம் ஏற்படும் கருத்தரிப்புக்களை கலைக்க முடியாதபடி சட்ட இறுக்கம் உள்ளது. இதனால் பெண்கள் தம் எதிர்காலத்தையே இழக்கும் நிலையும், பாதுகாப்பற்ற கருச்சிதைவு மூலம் உயிரை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது.
* பிரசவ வேதனையுடன் செல்லும் பெண்கள் பிரச விடுதிகளில் சில வைத்தியசாலை ஊழியர்களால் பாரதூரமான வார்த்தைகளால் தூசிக்கப்படும் நிலையில் வீட்டிலேயே தங்கி பிரசவத்தை மேற்கொள்கின்றனர்.
* பல தனியார் சிகிச்சை நிலையங்களில் மகப் பேற்று நிபுணர்கள் அதிக நேரங்கள் கடமையில் ஈடுபடுவதும், மகப்பேற்று நிபுணர்கள் தட்டுப்பாடும் பெண்களுக்கு அரச வைத்தியசாலைகளில் உரிய சிகிச்சை உரிய காலத்தில் பெறமுடியாமல் உள்ளது.
* "கருத்தடை தெய்வபாவம்" எனும் சமூக கருத்துருவாக்கங்களால் பெண்கள் பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர்.
* உணவுப்பழக்கவழக்கம் கர்ப்பினிப் பெண்களின் போசாக்கை பாதிக்கின்றது. அதாவது ஆண்களுக்குப் போதுமான சிறந்த உணவு வழங்கி அவர்கள் உண்டபின்பே பெண்கள் உண்ண வேண்டும் எனும் சமூக கருத்துருவாக்கம்.
* நிரந்தர கர்ப்பத்தடை சத்திரசிகிச்சையை மேற்கொள்ளவிரும்பும் பெண்கள், இதற்கான அனுமதியை பலரிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய நீண்ட படிமுறை. இது பெண்களின் பிள்ளைபெறும் தீர்மானத்தை உரிமையை கட்டுப்படுத்தும் தன்மையைக் காட்டுகிறது.

இவ்வாறு பெண்களின் இனப்பெருக்க சுகாதார உரிமைகளை பாதிக்கும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.


இதில் குடும்பம் சமூகம், சுகாதார நிறுவனங்கள், சட்டத்துறை போன்றவை சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமாகவும் தேசிய மட்டத்தில் எடுத்துக் கூறுவது மூலமாகவும் பெண்கள் எதிர் கொள்ளும் இப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். இன் நோக்கத்தின் அடிப்படையில் பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பினர் இந் நிகழ்வை ஒழுங்கு செய்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசியப் பெண்களின் கூட்டம்



சுனாமிக்குப் பின்னரான சவால்களை எதிர் கொள் வதற்கான ஆசியப் பெண்களின் கூட்டம் ஒன்றினை ஆசிய பெண்களின் சட்ட அபிவிருத்தி அமைப்பு இந்தோனேசியாவில் ஏற்பாடு செய்து நடத்தியது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுடைய அனு பவங்களை பகிர்ந்து கொள்வதுடன், அனர்த்தங்களை நோக்குவதும், சவால்களை எதிர்கொள்வதும் உரிமைக்காக வாதாடுவது பணியாற்றுவதையும் நோக்கமாகக்கொண்டு இக்கூட்டம் ஒழுங்குசெய்யப் பட்டிருந்தது. மலேசியா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், சிங்கப்பூர், தாய்வான், இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து இந் நிகழ்வில் 60 பேர் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறை, மட்டக்களப்பு, அம்பாந் தோட்டை, கிக்கடுவை, யாழ்ப்பாணம், கொழும்பு, போன்ற இடங்களிலிருந்து 11பேர் கலந்துகொண்டனர். சுனாமிக்குப் பின் இந்தோனேசியா மக்களின் வாழ்க்கைமுறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவ் அனர்த்தத்தின் பின் தம் வாழ்வை மீண்டும் கட்டியெழுப்புவதில் கட்டாயத் தேவையை உணர்ந் துள்ள ஆண்கள், பெண்களுடன் சமத்துவமான வாழ்க்கை முறையை மேற்கொள்வதை காணக்கூடிய தாக இருந்ததுடன் இந்நிகழ்வை ஒழுங்கு படுத்தி நடத்துவதில் அதிக பங்களிப்பும் செய்தனர்.

பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டபோது மிகவும் அழிந்துபோன நிலையிலும் தொழில் வளங்களையும், உறவுகளையும் இழந்த நிலையிலும் மக்கள் இருப்



பதை அவதானிக்க முடிந்தது. அம்மக்கள் 200பேர் அளவில் வேலை செய்யும் தண்ணீர்க்கப்பல் ஒன்றை ஒரு கிராமத்தின் நடுவில் சுனாமி தூக்கிக் கொண்டு வைத்துள்ளது. இனிவேலை செய்வதானால் அக்கப் பலை யார் தூக்கி கடலில் கொண்டு வைப்பார்கள்? என்ற கேள்வியுடனும் இனிமேல் தொழில் வளங்களை எப்படிப் பெறலாம் என்ற தாக்கத்துடனும் தொழிலா ளர்கள் காணப்பட்டனர். இங்குள்ள பெண்கள் போல் அங்குள்ள பெண்களும் பிரதான தொழிலாய் பன்பாய் இழைத்தல் இருந்துள்ளது. அத்தொழில் பெண்களு டைய வாழ்வில் ஒரு தனி வருமானத்தை ஈட்டுவதாயும்



இருந்துள்ளது. தற்போது ஏற்பட்ட சுனாமியால் எல்லாம் அழிந்துபோன நிலையில் பெண்கள் தொழில் செய்ய முடியாமல் இருப்பதை அறிய முடிந்தது. ஓர் கிராமத்தில் 700 குடும்பங்கள் இருந்துள்ளது. அதில் 600பேர் மிஞ்சியுள்ளனர். அதிலும் 45 பெண்கள் மாத்திரம் உள்ளார்கள். இவர்கள் தங்களுடைய எதிர் காலம் இனி எப்படி அமையப் போகிறது என்ற பல கேள்விகளுடன் இருக்கின்றனர். நலன்புரி நிலையம் ஒன்றிற்குச் சென்றபோது 60-80 வயது வரை 75 பெண்கள் இருந்தார்கள். இவர்கள் அனைவரும் கணவன்மாரை இழந்தவர்கள் பல மாதகாலமாக தொடர்ந்தும் கூடாரங்களில் இருந்து வருகின்றனர். அடிப்படை வசதிகள் இன்றி, தனித்து வாழ்வதும் எஞ்சியிருக்கும் பிள்ளைகளின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்றும், தங்கள் உரிமை, வாழ்வாதாரம்., மீள் குடியமர்வு போன்ற பல விடயங் களை யாரிடம் கேட்பது? அரசு மக்களுக்காகவா உள்ளது....? என்ற கேள்விகளுடனும் இப் பெண்கள் இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

நிலப்பகுதிக்குள் கடல் நீர் இன்னும் முற்றாக வற்றவில்லை. இடங்கள் துப்பரவு செய்யப்பட வில்லை. அங்குள்ள மக்கள் உள ரீதியாக மிகவும் பாதிக்கப்பட் டுள்ளதுடன் உள மருத்துவம் கட்டாயமாக இவர் களுக்கு தேவைப்படுகிறது. எனினும் உதவிகளும், ஆதரவுகளும் குறைவாகவே கிடைக்கின்றது.

**செ. மல்லிகா.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்தரத்தில்......

"அம்மா ரொட்டி சுட்ட" என்பது போல் சாதாரண தொனியில "அண்ணாக்கு வெடி சுட்ட" என்னும் பயங்கரத்தை அப்பாவியாய் கூறுகிறாள் சிறுமி.

வேதனையின்வெளிப்பாடு பிள்ளையில் தெரிந்தது. முதல் மாதம் முடிந்து காயம் ஆறிவிட்ட போதும் அந்த 4 வயது சிறுவன் கால் ஒன்றை இழுத்து இழுத்தே வந்தான். நேராக கால் வைத்து நடக்கமுடியாதபடி வலி இருக்கின்றது. "இருந்து கக்கா போகமாட்டான். போகும் போது சரியா அழுறான்...., ஒரு கோப்ப பால் குடிச்சாலும் உடனே வயிற்று வலி, கக்கா போறான்...." அடிவயிற்றில் பாய்ந்த துப்பாக்கி குண்டை அறுவை சிகிச்சைசெய்து எடுத்து விட்டாலும் இன்னும் இவன் சுகமாகவில்லை. "கிளினிக்கில் காயம் ஆறித்து என்றதுமே இனி கிளினிக் வரவேனாம் என்றுத் தாங்க." ஆனா பிள்ளை படுற கஷ்டத்தை சகிக்க முடியல்ல என்று பெற்றோர் கண்கலங்கினர்.

பட்ட காலிலே மீண்டும் மீண்டும் காயங்கள் பட, அரசின் மருந்தில் மேல் தோல் காய உள்ளே ரணங்கள் இன்னும் இன்னும் கீறுபட்டுக்கொண்டே உள்ளது. எறியப்பட்ட கல்லினால் மரத்தில் இருந்த காகங்கள் எல்லாம் பறந்துவிட்டது. ஆனால் இரத்தத் துடன் காயப்பட்டு மண்ணில் பிரண்டது மரத்தில் இருந்த பூக்களும் பிஞ்சுகளுமே. மீண்டும் காக்கைகள் வந்து அமரத்தொடங்க முகாம்களுக்குள் முடங்கிக் கொண்ட பூக்கள், பிஞ்சுகள் கதிகலங்கி நிற்கிறது. அரசின் பாதுகாப்பே தமக்கெதிரான பயங்கரமாகப்



பயந்து என்று விடியும் தம் பொழுதுகள் என்றபடி அவதியாய் முகாம்களில் மக்கள்.

* *

அண்மையில் ஏற்பட்ட மழையினால் திராய்மடு இடைத்தங்கல் முகாமில் இருந்து சிலகுடும்பங்கள் தம் முகாமைவிட்டு வேறு இடங்களுக்கு சென்றிருந்த னர். தாம், சன சந்தடி அற்ற நகரத்தில் இருந்து தள்ளி வீசப்பட்டவர்களாய் தம் நிலமை ஆகிவிட்டது என உணரும் உள்ளங்கள் இங்கு அதிகம். தமக்கான போக்குவரத்து வசதி மிகவும் மோசமாய் உள்ளது. பஸ் சேவை இன்னும் ஒழுங்கு இல்லை சந்தை வசதி இல்லை, பாடசாலை செல்லும் மாணவர்கள், "கிளினிக்" செல்லும் வயது போனவர்கள் படும் சிரமங்களை அரசோ, வேறு பொறுப்பு வாய்ந்தவர் களோ கவனத்தில் எடுக்க வில்லை. அதேபோல் தமது சுனாமி முத்திரை சமான்களுக்கும் போக்கு வரத்து வசதிகளற்ற நிலையில் அதை எடுத்து வருவதில் மிகவும் துன்பப்படுவதாகவும் தெரிவித்தார்கள். தொடரும் துன்பங்களுக்குள் கேள்வியாக இவர்கள் வாழ்வு.

பலவாறு தொடரும்
இடம்பெயர் வாழ்வு
நம்பிக்கையில்லா விடியல்களும்,
இந்த வாழ்வும்
எமக்கு அனுபவம்தான்
ஏன்?

ஒவ்வொரு முகாமிலும்
புதிய முகங்கள்
புரியாத முகங்களும்
அவர்களுக்கும் எமக்கும்
கொடிபோட்ட வாகனம்
கூரை போட உதவி செய்யும்.
உள்ளூர் நிறுவனம் உரையாடி உறவாடும்
நிவாரணம்
பெரிய தலைக்கு இது,
சிறிய தலைக்கு இது,
ஐந்து தலைக்கு மேல்



எத்தனை இருந்தாலும்
கணக்கு ஐந்து தலைக்கு மட்டுமே
எனினும்
கணக்கில்லாத தலைவிதியுடன்
மிகுதித் தலைகள்

இடம்பெயர் இடமெல்லாம்
மீண்டும் மீண்டும்
புதிய குடிசைகள்
எமக்குத் தெரியும்
நாளைய விடியல்
இன்னொரு முகாமில் தான் என்று

எங்களது ஓய்வு நேரம்
இப்படித்தான் கழிகிறது
குடிதண்ணீர் எடுப்பதற்கும் குளிப்பதற்கும்
மலம் கழிப்பதற்கும்


ஜெயந்தி. த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழையன கழிதலுமாய் “சுனாமி”



மின்னாமல் முழங்காமல் சைகைகளும் காட்டா மல் சுழன்று வந்த சுனாமியின் வயது ஒன்று, 26-12-2005இல் முடிவடைந்தது.

இழந்துபோன உயிர்களின் ஒரு வருட கிரிகை களுக்காக 26--12-2005 அன்று மக்கள் அனைவரும் கடற்கரையில் ஒன்று கூடினர். இந் நிகழ்வையொட்டி சில அமைப்புக்கள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்ததுடன் அனைவரும் இக் கிரிகைகளிலும் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

கடலருகே ஓடிவந்து
எங்கள் மனக்குறைகளை போக்கியிருப்போம்
உன் மடியின் கரையில் கால் பட்டால்
களைந்து விடும் எங்கள் கவலைகளும்.
உன் மணற்பரப்பில் மனம் ஆறி மனப்பாரத்தை இறக்கி விட்டு
மகிழ்வோடு வீடு சென்றோம்.....

என்று தள்ளி நின்று, கடந்துபோன காலக் கடற்பரப்பின் நினைவலைகளை மீட்டிப் பார்க்காத மனிதரே இல்லை எனலாம். அள்ளிவந்த சுனாமி கவலைகளை நிரம்பவே விட்டுச்சென்றாலும், கடல் ஆசை.... முடிவில்லாமல் அடி மனதில் தேங்கியே கிடக்கிறது. மனித வாழ்வுடன் ஒன்றிப் போன இயற்கைகளில் இருந்து மனித இனத்தை பிரிப்பதெப்படி.

கடலை அண்டி தாம் வாழ்ந்த இருப்பிடங்களில் இருந்து தூர குடியிருப்புப் பெற்றுச் சென்ற பலர் இன்றும் தம் பழைய இருப்பிடங்களைக் கோருவதையும் அதற்காக போராடுவதையும் நாம் காண்கிறோம். ஏனெனில் இயற் கையே தொழில், இயற்கையே உணவு, இயற்கையே வாழ்வு இவ்வாறு இயல்பாய் இருக்க இயற்கை தேவை.



(ஒருசில மணித்தி யாலங்களுக்குள் எம் நிம்மதியையும் சிதைத்திருந்தாலும்) இயற்கையே எமது நிம்மதி ஆகிறது. இங்கு நாம் சந்தித்த எத்தனையோ அழி வுகள் இவ் இயற்கை மட்டும் தந்ததில்லையே.. காலங்கள் செல்ல, சூழ்நிலைகள் மாற, சுற்றங்கள் பெருக, வாட்டிய துயரின் நினைவுகள் இருந்தாலும் அதன் ரணங்கள் ஆறிவிடும். வலிகளும் மறையும். மீண்டும் நாம் இயற்கை யுடன் இணைந்திடுவோம். மீண்டும் மனச்சுமை களைய கடற்பரப்பில் கால் பதித்து மனக்குறை போக்குவோம் கண்ணீரும் விடுவோம்.

கடலே, எனினும்
உனக்கோர் வேண்டுகோள்
எங்கள் கண்ணீர்க் கதைகளைக் கேட்டு
கண்ணீர் விட
மீண்டும் எங்கள்
வீடுகளிற்கு வரவேண்டாம்

கவிதை வரிகள்
T. ஜெயந்தி

## பெண்கள் குழுக்களின் ஒன்றுகூடல் - 2005

பெண்களில் அனேகர் தம் பாடசாலைப் படிப்பு முடிந்ததும் திருமணம், வெளிவேலை ஊதியத்துடன் தொ ழில் அல்லது வீட்டுவேலை (ஊதியமற்ற தொழில்) என தம் வாழ்க்கை வட் டங்களை சுருக்கி தமக்கான நாட்களை கடத்துகின்றனர். இதனால் இப் பெண்களுக்கு தங்கள் உணர்வுகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்காமல் போவதுடன் அனேகமாக பெண்கள் சார்ந்து எழும் பிரச்சினை களும் வெளித்தெரியாமல் மறைபட்டு போகின்றது. இவ்வா றான பெண்களை சகலவிதத்திலும் வலுப்படுத்த நாம் அவர் களை குழுக்களாக ஒன்று படுத்தியுள்ளோம்.

இவ்வாறு அமைக்கப்பட்ட பெண்கள் குழுக்கள் தங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வரவும் பரஸ்பரம் கருத்துக் களைப் பரிமாறிக் கொள்ளவும் ஆண்டுக்கொருமுறை ஒன்று கூடல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

இவ்வருடம் இவ் ஒன்று கூடல் நிகழ்வுகள் சத்துருக்கொண்டான் சர்வோதய பயிற்சி நிலையத்தில் 12-11-2005 அன்று இடம் பெற்றது.



www.tamilarangam.net




நன்றி
"டாமிந்து" (படங்கள்)

சூரியா பெண்கள் அபிவிருத்திநிலையம்

அன்புடையீர்,

கடந்த 27-11 2005 ஞாயிறு வீரகேசரி "கேசரி சிறு விளம்பரம்" "மணமக்கள் தேவை" பக்கம் 44ல் வெள்ளவத்தையில் உள்ள வேல் அமுதன் 8/3/3 Metro Apartment ,55th Lane, Colombo - 06. எனும் விலாசத்தில் உள்ள திருமணத்தரகு சேவை நடத்தும் ஒருவர் பெண்களை மிகவும் தரக் குறைவாக ஏழு செருப்புத் தேய்ந்தும் குமர்கள் மாப்பிள்ளை இல்லாமல் ஏங்கிக் கிடக்கிறார்கள் என மிக கேவலமாக எழுதி தனது சேவை பற்றி விளம்பரம் செய்துள்ளதை திருமணம் செய்த, செய்யாத அனைத்து பெண்களும் வன்மையாக கண்டிக் கின்றோம். தொடர்ந்து இவ்வாறான விளம்பரம் வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி பெண்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறான விளம்பரங்களை, பெண்களை அவமதிக்கும் விளம்பரங்களை வீரகேசரி வெளியிடுவதை தவிர்க்க வேண் டும் எனவும் விரும்புகிறோம்.

நன்றி
க. பாக்கியவதி

## இனி

பாதைகளும் பயணங்களும்
நீண்டு போவதெப்போது
குறுக்கீடு ஏதுமற்று
பயணிப்பது எப்போது

கரம் பிணைந்த உந்துதலில்
ஒளி தெறிப்பதெப்போது
கேசரித்த கணங்கள் யுகம்
பிரசவிப்பதெப்போது

காலப் போக்கில் ஆறிப்போகும்
துயர்கள் அல்ல இப்போது
கண்ணீர்தான் சுட்டவடு
ஆறிப்போவதெப்போது
இயற்கை அன்னை தீண்டி விட்ட
துயரமல்ல இப்போது
தெருச்சுனாமிகளை சுட்டெரிக்க
விழி கிடைப்பதெப்போது
கருவறைக்குள் மட்டும்தான்
சுதந்திரம் இப்போது
வன்முறைத் தாண்டவத்தை
தண்டிப்பதெப்போது
வேஷங்களின் முகத்திரையை
கிழித்தெறிவதெப்போது
உறுதிபெற்ற உரிமையினை
தக்கவைப்பதெப்போது

எப்போது என்றபடி
ஏக்கமென்ன இப்போது
அடக்கு முறை ஒடுக்கிடவே
வெகுண்டெழுவோம் இப்போது

இலக்கினை பற்றிடவே
அணியாவோம் இப்போது
விதை ஒடுடைத்து வரும் முளைக்கு
சுணக்கமில்லை அப்போது

கோகுலன்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல. 20, டயஸ்லேன்,
மட்டக்களப்பு.
தொ. பே- 065-2223297

முகவரி.........................................
.........................................
.........................................
.........................................

Issn No. 1391-6130